# பரதரின் நாட்டியமும் பரத நாட்டியமும்

கலைமாமணி
டாக்டர் பத்மா சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎச்.டி.

விஞ்ஞான ரீதியாக ஒரு பொருளைப் பற்றி ஆராயும்போது, அதில், மொழி, இனம், பிரதேசம், இவற்றின் அடிப்படையில் எவ்வித விருப்பு, வெறுப்புகளோ அல்லது குறுகிய கண்ணோட்டமோ இல்லாமல் இருக்க வேண்டும் என்பது உண்மை யான ஆராய்ச்சித் துறையின் மரபு. இந்த முறை யில்தான் நான் கண்டறிந்த சில கருத்துக்களை இங்கு அளிக்க முற்படுகிறேன்.

"பரத நாட்டியம்" என்று இன்று பெரும் புகழுடன் விளங்கும் உன்னதமான நடனக்கலை வடிவம், சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்வரை 'சதிர்' என்றும் 'சதிர்க் கச்சேரி' என்றுமே அழைக்கப்பட்டது. 1930-ம் ஆண்டு, இந்த 'சதிர்' நடனம் ஆலயங் களில் நடத்தப்படக்கூடாது என்று ஒரு சட்டம் நிறைவேறியது. இந்தச் சதிரின் மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள் கையாண்ட உத்திகளில் ஒன்று தான் சதிரை 'பரத நாட்டியம்' என்ற பெயரில் பிரகடனப்படுத்தியதும். இது, அவர்கள் கோரிய பலனை அளித்து மாபெரும் வெற்றி பெறச் செய்தது. இது உண்மை. நல்ல குடும்பப் பெண்கள் நடனக் கச்சேரியைப் பார்க்கவும் கூடாது என்ற நிலை மாறி, இன்று நடனமாடுதல் ஒரு நாகரிகச் சின்னமாக வளர்ந்துவிட்டது. பரத முனிவரின் பெயருக்குத்தான் எவ்வளவு சக்தி! சமூக மரியாதை என்ற மாபெரும் நன்மையைத் தவிர 'பரதநாட்டியம்' என்ற பெயர் வேறு சில குழப்பங்களுக்குக் காரணமாகி விட்டது. இந்த அடிப்படையில் இன்று நம்மிடையே சில கருத்து மயக்கங்கள் நிலவி வருகின்றன.

1. இந்த 'பரத நாட்டியம்' தான் பாரதத்தில் இப்போதுள்ள கலை வடிவங்களுள் மிகத் தொன்மை வாய்ந்தது.

2. இந்த 'பரத நாட்டியம்' 2000 ஆண்டு களாக அதன் தனித் தன்மையின் தூய்மையை அப்படியே காத்து வந்துள்ளது.

3. பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தை முழுமையாகப் பின்பற்றும் ஒரே 'நாட்டியம்' இந்த 'பரத நாட்டியம்'.

4. பாவம், ராகம், தாளம் ஆகிய மூன்றும் சேர்ந்ததுதான் 'பரத நாட்டியம்'.

5. இன்னும் மொழிப் பிரச்சனை அடிப் படையிலும், தமிழில் பரத நாட்டியமா? தெலுங்கில் பரத நாட்டியமா? போன்ற சில வேண்டாத கொந்தளிப்புகள். இதற்கிடை யில், தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் கள் மராட்டி மொழியில் இயற்றிய நடன இசைப் பாடல்களும், கேரளத்தில் ஸ்வாதித் திருநாள் மஹாராஜாவின் ஸம்ஸ்கிருத், மலையாள, ஹிந்துஸ்தானி, மணிப்பிரவாள பாடல்களும் இன்று பல கேள்விக் குறி களுக்குக் காரணமாகின்றன. சற்று ஆழ்ந்து, நிதானித்து பரத சாஸ்திரத்தைப் படித்தால், இந்த பிரச்னைகள், பிரமைகள் எல்லாம் தீர்ந்து தெளிவு பிறப்பது உறுதி. நான் இவற்றைச் சுட்டிக் காட்டுவதால் இன்று வழக்கிலிருக்கும் மரபுகளைக் குறைவாக மதிப்பிடுகிறேனென்றோ, குறை கூறுகின்றே னென்றோ எண்ண வேண்டாம். சரித்திரப் பூர்வமான சில உண்மைகளை எடுத்துக் கூறுவதனால் இந்த மரபின் சிறப்பியல்புகள் எவையும் குறையப்போவதில்லை.

பரதர் எழுதிய சாஸ்திரத்தில் 'நாட்டியம்' என்ற சொல்லுக்கு நாடகம் என்றுதான் பொருள். நிருத்தம் என்பது நடனம். நிருத்தியம் என்ற மற்றொரு சொல் கருத்துக்களை உணர்த்தும் நடனம் என்று பரதருக்குப் பிந்திய காலத்தில் பொருள்பட்டது இலக்கணமுறையில் பார்த்தால் சதிர் நடனம் நிருத்த. நிருத்திய வகைகளைத்தான் சாருமேயன்றி 'நாட்டியம்' என்ற பொதுத் தலைப் பிற்கு எப்படிப் பொருந்தும்? பரத நாட்டியம் என்ற சொற்றொடரில் சொல்லளவில்தான் இணைப்பு உள்ளது. சாத்திர அடிப்படையில் இந்த நடன வடிவத்திற்கும் பரதர் விவரிக்கும் நாட்டியத்திற்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. இன்றைய பரத நாட்டியம் ஒரு நடன வடிவமே. ஆனால், பரதரின் நாட்டியத்தில் நடிக, நடிகையர்கள், தாமே வசனம் பேசி, பாடி, ஆடி நடிக்க வேண்டும். அந்த அபிநயம் தவிர, நடன வடிவை எடுத்துக்

கொண்டால்கூட பரதரின் நாட்டியத்தில் கையாளப் பட்ட பல அம்சங்கள் சதிரில் இல்லை. உயிரோட்ட முள்ள எந்த கலையும் காலப் போக்கில் மாறிக் கொண்டேதான் வருகிறது. 2000 ஆண்டுகளாக நம் மொழிகள் மாறுதலடைய வில்லையா? வாழ்க்கை முறை வேறுபட வில்லையா? அதே போலத்தான் பரதரின் நாட்டியத்தில் கையாளப் பட்ட செய்முறை வேறு, இன்று நாட்டியங்களிலும் நடனங்களிலும் கையாளப்படும் செய்முறைகள் வேறு. கலையின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இந்த உண்மை புலப்படும்.

இன்றைய பரத நாட்டியம் சதிர் வடிவில் சுமார் 250 ஆண்டுகளாகத்தான் நிலவி வந்துள்ளது. இதில் பிரத்யேகமாகக் கையாளப்படுவது பரத அடவுகள் தான். சாரிகள் என்று பரதர் கூறியுள்ள முழுமையான காலசைவுள் இதில் அதிகம் இடம் பெறவில்லை. சென்ற 300 ஆண்டுகளாக பாரதம் முழுவதிலும், பாதத்தை நகர்த்துவதைவிட தட்டுவதே முக்கியமாக விளங்குவதாக நடன செய் முறை வளர்ந்து வந்திருக்கிறது பரதரின் நாட்டி யத்தில் நடிக நடிகையர்கள் ஆடவும் வேண்டியிருந் தது நடனம், அந்த நாட்டியத்தின் ஒரு பகுதி யாகத்தான் பயன்படுத்தப்பட்டது. அந்த நடன அசைவுகள் பொதுவாக வெற்றிடத்தை அதிகமாக நிரப்பி, பயன்படுத்துவதாக அமைந்திருந்தன. இன்றைய அடவுகள் பாதத்தைத் தட்டுவதிலேயே அதிகக் கவனம் செலுத்துவதால் அதிக இடத்தை நிரப்ப முடிவதில்லை, தேவையும் இருப்பதில்லை.

பொதுவாக வடிவ அமைப்பின் அடிப்படையில் பார்த்தால் தமிழகத்தின் தெருக்கூத்து, மற்றும் பாகவதமேளம், கேரளத்தின் கூடியாட்டம், கர்நாட கத்தின் யட்சகானம் ஆந்திர பிரதேசத்தின் கூச்சு புடி பாகவதமேளம், உத்தர பிரதேசத்தின் ராம்லீலா நாடகங்கள், வங்காளத்தின் ஜாத்ரா, போன்ற கலை வடிவங்களை பரதரின் நாட்டியத்துடன் ஒப்பிடலாம். பரதரின் நாட்டிய சாஸ்திரம் வெறும் நடன நூல் அல்ல. அரங்கக் கலையை முழுமை யாக போதிக்கும் ஒரு கலைக் களஞ்சியம். இது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் ஸம்ஸ்கிருதத் தில் எழுதப்பட்டது இன்று கிடைத்துள்ள அரங்கக் கலை நூல்களுள் உலகிலேயே மிகத்தொன்மை வாய்ந்தது இந்த நூல். ஸம்ஸ்கிருத அலங்கார சாஸ்திரத்தின் முதல் நூலும் இதுவே. இந்த நூல் கூறும் பல அம்சங்களில் ஒன்று யாப்பிலக்கண மாகும். இவையாவற்றின் அடிப்படையில் எழுது வதுதான் பரதரின் 'நாட்டியம்'. அந்த நாட்டியம் இப்போது அதன் முழுவடிவில் எங்குமில்லை. ஆனால், பரதரின் நூலைத் தழுவாத கலை வடிவமும் நம் நாட்டில் எங்கும் இல்லை. அவர் நூலை முழுமையாகப் பின்பற்றாமல், ஒரு சில அம்சங்களை மட்டும் ஒவ்வொரு பகுதியிலும் பரம் பரையாகக் கையாண்டு வருகிறோம். பரதரின் நூலில் காணப்படும் பொருள்கள் நம் நாட்டின் பல வேறு பாகங்களிலும் சிதறிக் கிடக்கின்றன. குமரி முதல் இமயம் வரை என்பதைவிட, நம் ஆசியாக் கண்டம் முழுவதும் பரதர் கூறும் அம்சங்கள் சிதறிக் கிடப்பது உண்மை. இந்த நிலையில், சதிர் பரத நிருத்யம், கதகளி பரத நிருத்யம், கதக் பரத நிருத்யம், மணிபுரி பரத நிருத்யம் என்றும், கூச்சபுடி பரத நாட்டியம், கூத்து பரத நாட்டியம், கூடியாட்ட பரதநாட்டியம் என்றும் சொல்வது பொருத்த மல்லவா? பரதரின் பெயரும் நூலும் எல்லோருக்கும் தான் சொந்தம்.

பரத சாஸ்திரம் தமிழத்தில் அதிக மதிப் போடு விளங்கியது என்பதற்கு எண்ணற்ற ஆதாரங்கள் இருக்கின்றன தமிழில் இன்று கிடைத்துள்ள நடன, நாடக, சம்பந்தமான நூல்கள் யாவும் பரதரின் பெயருக்கும், கருத் துக்களுக்கும் பெருமதிப்புக் கொடுத்து இருப்ப தாக இருக்கிறது. பரத சேனாபதீயம், பரத சூடாமணி, பரதசங்கிரஹம், சுத்தானந்த பிர காசம், பஞ்ச மரபு, கூத்த நூல் போன்ற இவை யாவும் பரதருக்குப் பின் எழுந்த நூல்கள். இவை நமக்குக் கிடைத்த அளவில் பார்த்தால் பரத சாஸ்திரத்தை, அவை சில அம்சங்களில் பின்பற்றுவதை அந்நூல்களே அறிவித்துள்ள தைக் கண்டு, அந்த நூலாசிரியர்களின் உண்மை யான பண்பும், தெளிவான சிந்தனையும் நமக்குப் புலனாகிறது. மொழி, இனம் ஆகிய விருப்பு, வெறுப்புகளின்றி சிறப்புக் கலை, அம் சங்களைப் பகிரங்கமாக எடுத்தாண்ட தமிழ்க் கலைஞர்களையும், பண்டைய நூல் ஆசிரியர் களையும், எண்ணி மகிழ்ந்து இன்று வியக்க வேண்டியிருக்கிறது 'பரதர்' பெயருக்கு அள வற்ற மதிப்பு நாடெங்கும் வளர்ந்ததின் சின்னம் இந்தத் தமிழ் நூல்கள்.

ஆனால், 'பரதர்' என்ற பெயரில் பலர் இருந் திருக்க வேண்டும் என்பது சில ஆராய்ச்சியாளர் களின் முடிவு. ஆதிபரதர், விருத்தபரதர் என்று பல பரதர்கள் இருந்திருக்கிறார்கள். 'பரதர்' என்ற ஒரே புனைப் பெயரில் நாட்டிய சாஸ் திரத்தின் 37 அத்யாயங்களையும், பல நூற்றாண்டு களில் எழுதப்பட்டிருக்கவேண்டும். நமது தாய்

மொழியான தமிழுக்கு 'அகத்தியர்' என்ற பெயர் எவ்வளவு முக்கியமோ, அதேபோல நாடகம், நடனம், இசை கவிதை, அலங்காரம் இவை ஒருமித்த கலையுலகத்திற்கு 'பரதர்' என்னும் பெயர் விளங்கி வந்துள்ளது. ஆகவே பரதர் ஒருவரல்லர், பலராவார்.

தென்னாடு போர்களினாலும், மதவெறி அழிவுகளாலும் அதிகமாகப் பாதிக்கப்படாததால், காக்கப்பட்ட நமது பழம்பெரும் கலாசாரத்தின் பல அம்சங்களில் பரதக்கலையும் ஒன்று. பரதக் கலையின் செய்முறையைக் காலத்தால் அழியாத வகையில் கல்லிலே வடித்துக் காத்தபெருமை தமிழகச் சிற்பிகளைச் சாரும். இது, தமிழக மக்களின் கலைப் பண்பை அவர்களின் ஒருமித்த உணர்வுகளைப் பிரதிபலித்த தமிழ் மன்னர்களின் பண்பைக் காலமெல்லாம் பறை சாற்றுகின்றன. பரதக் கலை எங்கு பிறந்தது பற்றித் திறமையோடும், தகுதியோடும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சிகள் நடக்கட்டும். ஆனால், அது தமிழகத்திலே எந்த அளவுக்குக் காக்கப்பட்டுள்ளது என்பது நமது பெருமைக்குரியதாகும். இதைக் கூறும்போது நமது சதிர் நடன சம்பிரதாயத்தைத் தலை முறை தலைமுறையாகக் காத்துக் கையாண்டு நமக்கு அளித்துள்ள உன்னதமான நடனக் கலைஞர்களுக்கும், வணக்கத்திற்குரிய நடன ஆசிரியப் பெருமக்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறோம்.

பாரத நாட்டின் பல்வேறு கலை அம்சங்களைச் சேகரித்து ஒரே நூலாக வடித்தெடுக்கப்பட்டது நாட்டிய சாஸ்திரம். சேகரிக்கப்பட்ட அம்சங்களில் தமிழகக் கலை அம்சங்களும் சங்கமமாகியிருப்பது உறுதி. பல்வேறு ஆதாரப் பொருள்களை ஒவ்வொரு பகுதியும் அளித்து, அவற்றின் முழுமையான சேர்க்கையின் வடிவத்தை அப்பகுதிகள் திரும்பப்பெற்றன. அந்த முழுமையான அரங்கக்கலை வடிவம்தான் பரதரின் நாட்டியம். நாம் இன்று பரதநாட்டியம் என்றழைக்கும் நடன வடிவம் அந்த கொத்துக்கடல் மத்தியிலுள்ள ஒரு முத்தைத்தான் குறிக்கும். நாட்டிய சாஸ்திரம் என்னும் இந்தக் கடலில் எண்ணற்ற முத்தும், பவளமும், வலம்புரிச் சங்கும் வரிசை வரிசையாகப் பரவிக்கிடக்கின்றன. ■


WITH BEST WISHES
FROM

A WELL
WISHER

SUPERTEK